1977 ஆகஸ்ட் 6] [பேரவைத் தலைவர்]

அவர் ஏறக்குறைய 59 ஆண்டு இந்த மண்ணிலே இருந்து, கிட்டத்தட்ட 38 ஆண்டு அரசியலிலே ஈடுபட்டு, பல்வேறுபட்டவர்களின் முன்னேற்றத்திற்காக மட்டுமல்ல, தமது தேசிய சேவையையும், காந்தீய பக்தியையும் நிலைநிறுத்திப் போயிருக்கிற பெரியவர்களிலே ஒருவர் ஆவார். அவர் பல பொறுப்புகளை ஏற்றிருக்கிறார். இலக்கியத்திலே மட்டுமல்ல, அரசியலிலே மட்டுமல்ல, கௌரவ நீதிபதியாகக் கூட இருந்து அவர் சேவை புரிந்திருக்கிறார். அவர்கள் உலகத்திலேயுள்ள அத்தனை நாடுகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த சிறந்த தேசபக்தர் ஆவார். நான் அவையிலே சாதாரண உறுப்பினராக இருந்தபொழுது, அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, நல்ல ஜனநாயக அரசியல் கருத்துக்களையெல்லாம் தருகின்றவராக, பல பேர்களுக்குப் பயிற்சி தருகின்ற வகையிலே தன்னுடைய அனுபவத்தை எடுத்துச் சொன்ன ஒரு பெரியவர் ஆவார்.

அவருடைய மறைவிற்கு இந்த அவை தெரிவிக்கின்ற ஆழ்ந்த அனுதாபத்தில் நானும் கலந்துகொண்டு, என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, அவருக்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையில் உறுப்பினர்களை ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவரவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

உழவுத் தொழிலாளர் குடியிருப்பு மனைகள் ஒப்படை.

*22 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூலி விவசாயிகள் குடியிருந்து வரும் குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) மேலும் எத்தனை பேர்களுக்கு கொடுக்க வேண்டியுள்ளது?

(இ) ஒருவருக்கு எத்தனை சென்ட் நிலம் வரை கொடுக்கப்படுகிறது?

[1977 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) 1,75,224.

(இ) 3,574. மலைத் தோட்டப் பகுதிகளில் இச்சட்டம் 19—6—1977-ல்தான் செயலுக்குக் கொண்டுவரப்பட்டமையால், அப்பகுதியிலுள்ளவர்கள் இவ்வெண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை.

(உ) 19—6—1971 அன்றுள்ளவாறு உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரின் அனுபோகத்தில் இருந்துவரும் குடியிருப்பு மனைகளை, அந்த நிலம் எத்தனை சென்டாக இருப்பினும் உச்சவரம்பு ஏதுமின்றி, உரிமை வழங்கப்படுகின்றது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஏற்கனவே அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தது எத்தனை சென்டாக இருந்தாலும் உரிமை வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் 2 சென்ட், 3 சென்ட் கூட கிடைக்க முடியாது என்கிற அளவுக்கு பல சிக்கல்கள் இருப்பதன் காரணமாக பல பேர்கள் இன்னும் உரிமை அடைய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே இந்தச் செய்தி இதுவரையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படிக் கொண்டு வந்தால் அது குறித்து நிச்சயம் அரசு ஆலோசிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: இதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட சில பட்டாக்கள்கூட திரும்பப் பெற வேண்டுமென்று மாயூரம் போன்ற பகுதிகளில் ஆணையிடப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை அரசு கவனித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்தத் தகவலும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. அப்படி வந்தால் அது பற்றிக் கவனிக்கப்படும் என்று நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 6]

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளான, கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்களுக்குச் சொந்தமான இடங்களில், ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்பு இல்லாதவர்கள் குடிசை போட்டு குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இன்னும் சரியாக இயற்றப்படாமல் இருப்பதால் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான சட்டங்களைத் திருத்தி அவர்களுக்கே கொடுக்க முடியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதைப் பற்றித் தேவையான தகவல்களை உறுப்பினர் அவர்கள் எனக்கு எழுதி அனுப்புவார்களானால் அது குறித்துப் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கக் கூடிய இடத்திலே உள்ள மரங்கள் தங்களுக்கே சொந்தமானது என்று அந்த நிலத்தின் சொந்தக்காரார்கள் கூறுகிறார்கள். பட்டா வழங்கப்படக்கூடிய இடத்திலே உள்ள மரங்களை பட்டாதாரர்களுக்கே என்று அரசாங்கம் அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களில் இருக்கிற மரங்கள் மட்டுமல்ல, கட்டிடங்கள் உட்பட அவர்களுக்கே சொந்தம் என்றும், அப்படி அந்த நிலச்சுவான்தாரர் அவைகளைத் தாங்களே எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற நிலைமை வருமானால் அதற்கேற்றாற் போல் கொடுக்கப்படுகின்ற அளவுக்கு, திருப்தி படத்தக்க அளவுக்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது அப்படி மரம் வெட்டப்பட்டு இருக்குமானால், அதைத் தெரிவித்தால், அது கவனிக்கப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

திரு. என். வரதராசன்: அமைச்சர் அவர்கள் பதிலிலே திருப்தி இருக்கிறது. ஆனால் தகவல்கள் அதற்கு நேர் மாறாக இருக்கின்றன. மரத்தை அனுபவிக்க முடியாமல் தடுக்கிறார்கள்

என்பது மட்டுமல்ல. பாத்திரம் கழுவுவதற்குக் கூட இடம் கொடுக்க மறுக்கிறார்கள். 2 அல்லது 3 சென்ட் நிலத்தை விடுகிறார்கள். அதை மாற்ற அரசு முயற்சிக்குமா? தமிழகம் முழுவதும் இப்படி நிலம் அற்றவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க ஒருமித்த சட்டம் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, அனைத்தையும் பரிசீலனை செய்து, செய்ய வேண்டிய முறைப்படி காரியங்களை இந்த அரசு செய்யும் என்று உறுப்பினருக்கு உறுதி கூறுகிறேன்.

திரு. துரை. கலியமூர்த்தி: தற்போது ஏழை விவசாயிகள் ஆதி திராவிடர்கள் வீடு கட்டுகின்ற இடம் களம் புறம்போக்கு என்ற முறையிலே காலி செய்கிறார்கள். அதை நிறுத்தி வைக்குமா இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அங்கத்தினர்களுக்குக் கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் தயவு செய்து எழுதி அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். ஆவன செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கூறி இருக்கக்கூடிய அறிவிப்புக்கும், தஞ்சை மாவட்டத்தில் நடைமுறையில் நடப்பதற்கும் பெரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. அங்கே சர்வே செய்வது என்ற பெயரில் அந்தக் கட்டிடத்தினுடைய அளவுக்கு மேல் ஒரு அங்குலம்கூடக் கொடுக்காமல் ஏற்கனவே நீண்டகாலமாக அவர்களுடைய கைவசம் அனுபவித்து வந்த 5, 6 சென்ட் நிலத்திலிருந்து, இரண்டு சென்ட் தான் அதற்குமேல் தர முடியாது என்று அரசாங்க அதிகாரிகள் கெடுபிடி செய்கிறார்கள். அதனால் பெரிய அதிருப்தி ஏற்படுகிறது. ஆகவே இது சம்பந்தமாக அமைச்சரவர்கள் தெரிவித்த கொள்கையின்படி மாவட்டங்களுக்கு தக்க உத்திரவுகள் அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே ஏற்கனவே அனுபவித்துவரும் நிலம் முழுவதும் வழங்கப்பட வேண்டும். மாற்று நிலமானால் 3 சென்டுக்குக் குறையாமல்

1977 ஆகஸ்ட் 6] [திரு. கி. மனோகரன்]

இருத்தல் வேண்டும். அதிலே அவர்கள் ஏதாவது தகராறு செய்தார்களானால் அதை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்புவீர்களானால் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் வசதியாக இருக்கும் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கிராமங்களில் சில ஏழைகள் ரோடு ஓரங்களில் வீடு கட்டி, குடிசைகள் அமைத்திருக்கிறார்கள். ஹைவேஸ் இலாக்கா அவர்களை அப்புறப்படுத்த முயற்சி எடுக்கிறார்கள். அப்போது அவர்களுக்கு மாற்று இடம் அரசாங்கம் கொடுத்துவிட்டு, அவர்களை அங்கிருந்து மாற்ற முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு — நண்பர் ஜேம்ஸ் கேட்ட கேள்விக்கு — நான் அளிக்கின்ற பதில்: இடத்தைப் பொறுத்தது, இடத்தின் தேவையைப் பொறுத்தது. அரசாங்கத்துக்கு எந்த அளவுக்கு அந்த இடம் பயன்படும் என்பதையும் ஒட்டியது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அரசாங்கத்திற்கு அந்த இடம் தேவை என்ற கட்டாயமான சூழ்நிலை ஏற்படுமேயானால், அதற்கு 'ஆல்டர்னேடிவ் சைட்' கொடுக்க நிச்சயம் அரசாங்கம் தயாராக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஊதியம்.

*23 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டத்தில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய ஊதியத்தைப் பெற்றுத்தர தனி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி ஆகிய ஏழு வட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமரச அதிகாரி செயற்பட்டு வருகிறார்.